விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU- National Tamil Daily

மலர் 27 ஆடி 10 ஜுல்ஹஜ் 6 இதழ் 165

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 25 7 1985

★ பஞ்சாப் பிரச்சினை—

## ரஜீவ்-லோங்கோவால் தீர்வு

## உடன்படிக்கையில் கைச்சாத்து

(புதுடில்லி)

பஞ்சாப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் உடன்படிக்கைப் பத்திரமொன்றில் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தியும் அகாலிதள் தலைவர் சன் ஹர்ச்சன் சிங் லோங்கோவாலும் நேற்று கையெழுத்திட்டனர்.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் சண்டிகாரின் தலைநகர் திட்டப்பகுதி பஞ்சாப்பிற்குக் கிடைக்கிறது.

முன்னைய பஞ்சாப் மாகாணத்திலிருந்து யூனியன் பிரதேசத்தில் சேர்க்கப்பட்ட பஞ்சாபி மொழி பேசப்படும்பகுதி பஞ்சாப்பிற்கும், ஹிந்திமொழி பேசப்படும் பகுதி ஹரியானாவிற்கும் கிடைப்பதாக இவ் உடன்படிக்கையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.



சண்டிகாரைப் பஞ்சாப்பிற்கு அளிப்பதும், அதற்குப் பதிலாக ஹரியானாவிற்கு வழங்கப்படும் பகுதிகளும் அடுத்த ஆண்டு இந்திய குடியரசுத்தினத்தில் ஒரே நேரத்தில் வழங்கப்படும் என்றும் அந்த உடன்படிக்கையில் தெரி

[7ம் பக்கம் பார்க்க]

யுத்த நிறுத்தத்தை—

# பிரதான தமிழ் தீவிரவாத இயக்கங்கள் மீறவில்லை!

## ராஜாங்க அமைச்சர் கருத்து!!

(கொழும்பு)

"இலங்கையில் அமுலில் இருந்துவரும் யுத்த நிறுத்தத்தைப் பிரதான தமிழ்த் தீவிரவாத இயக்கங்கள் எதுவும் மீறவில்லை. சிறிய குழுக்களே குழப்பங்களிலும் வன்முறைகளிலும் ஈடுபட்டு வருகின்றன" என்று ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தையடுத்து இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே கலாநிதி அல்விஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அல்விஸ் தொடர்ந்து கூறியதாவது: "தற்போது அமுலில் இருந்துவரும் யுத்தநிறுத்தத்தை பூட்டான் பேச்சுக்களில் கலந்துகொண்ட பிரதான தமிழ்த்தீவிரவாத இயக்கங்கள் எதுவும் மீறவில்லை.

சிறியளவிலான பயங்கரவாதக்குழுக்களே குழப்பங்களை ஏற்படுத்தி யுத்தநிறுத்த நிலைமையைப் புறக்கணித்து வருகின்றன

சிங்கள மக்களையும் அரசையும் கோபமடையச்செய்வதே

(7-ம் பக்கம் பார்க்க)

## அனுதை ஓவியக் கலைஞருக்கு புதுடில்லியில் கல்விவாய்ப்பு!

[யாழ்ப்பாணம்]

ஓவியக்கலையில் தேர்ச்சி பெற்ற அனுதை இளைஞர் ஒருவருக்குப் புதுடில்லியில் உள்ள நுண்கலைக் கல்லூரியில் நான்கு ஆண்டுகள் உயர்கல்வி பயில வாய்ப்புக்கிடைத்துள்ளது.

இவர் இம்மாதம் 28ம் திகதி இலங்கையை விட்டுப் புறப்பட்டுச் செல்கிறார்

நல்லூரைச் சேர்ந்த கந்தையா சந்திரதாஷ் என்பவரே இச்சலுகையைப் பெற்

(7-ம் பக்கம் பார்க்க)

● வன்னியில் நேற்று—

## துப்பாக்கிப்பிரயோகத்தில் பல பொதுமக்கள் பலி!

[ஏ. வி மாணிக்கம்]

வவனியா புநாரை என்னுமிடத்தில் நேற்றுமாலை இனந்தெரியாத நபர்கள் நடாத்திய துப்பாக்கிப்பிரயோகத்தில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவனியாவுக்கும் மதவாச்சிக்குமிடையில் 9ம் கட்டையில் உள்ள சிங்களக்குடியேற்றப் பகுதியில் இத்துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் இடம்பெற்றது

இச்சம்பவம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பதற்ற நிலையால் வாகனப் போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதத்துள்ளன

(மா)

வவனியா—

## நீர்ப்பாசன அலுவலகம் குண்டுவைத்துத் தகர்ப்பு!

(வவனியா)

வவனியா நீர்ப்பாசன அலுவலகம் குண்டுகள் வைத்து தகர்க்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

பாவற்குளம் 5ம் யூனிற்றில் இயங்கிவந்த இந்த அலுவல

[7-ம் பக்கம் பார்க்க)

## "திம்புபேச்சில்இழுபறி இல்லை தொடர்ந்து நடைபெறும்"!

– குர்ஷித் ஆலம்கான்

(புதுடில்லி)

"இலங்கை இனப்பிரச்னை குறித்து பூட்டான் பேச்சுக்களில் இழுபறி எதுவுமில்லை. அப்பேச்சுக்கள் தொடர்ந்து இடம்பெறும்" என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் திரு குர்ஷித் ஆலம்கான் தெரிவித்துள்ளார்

இந்திய லோக சபாவில் கேள்வி நேரத்தின்போது உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு ஆலம்கான் தொடர்ந்து கூறியதாவது:-

[7-ம் பக்கம் பார்க்க]

## நல்லூர் உற்சவகால பாதுகாப்பு

[யாழ்ப்பாணம்]

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தின்போது அங்குவரும் பக்தர்களின் நலன்கருதி எடுக்கவிருக்கும் பாதுகாப்பு - சுகாதார மற்றும் நடவடிக்கைகள் குறித்து அடுத்த மாதம் முதலாம் திகதி சகல அமைப்புகளும்கூடி ஆலோசனை நடாத்தவுள்ளன

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் ஆவணி 21ம். திகதி ஆரம்பமாகவுள்ளது தெரிந்ததே.

[மா]

வடக்கில் பிரபாகரன்—

## தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும்படி பணித்திருந்தார்!

### அரச உளவுத்துறை தகவல்

(கொழும்பு)

கடந்த வார இறுதிப்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் வே. பிரபாகரன் வடபகுதியில் தங்கியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க பாதுகாப்பு வட்டார உளவுத்துறை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

அவ்வட்டாரம் தெரிவித்திருப்பதாவது: கடந்தவார இறுதிப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் வே. பிரபாகரன் வடபகுதியில் தங்கியிருந்தார்.

(7-ம் பக்கம் பார்க்க]

## வெலிகடை மரணங்களுக்கு ஈ. என். எல். எவ். அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

வெலிக்கடை சிறையில் இடம்பெற்ற தமிழ்க் கைதிகள் படுகொலையின் 2வது ஆண்டு நினைவை ஒட்டி, 'ஈழத் தேசிய விடுதலை முன்னணி' (ஈ என். எல் எவ்.) பெரிய அளவிலான வர்ணச் சுவரொட்டிகளை நேற்று வெளியிட்டுள்ளது

தமிழ் ஈழ விடுதலைப்புலிகள், தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஈ பி. ஆர், எல். எவ்.), ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) ஆகிய நான்கு இயக்கங்களின் சின்னங்கள் இச்சுவரொட்டிகளில் பொறிக்கப்பட்டுள்ளன, (மா)

## மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம்

(மன்னார்)

"இருண்ட இக்கால கட்டத்தில் சகல மதத்தலைவர்களும் பொதுமக்களும் ஒன்றிணைந்து மன்னார் மக்களின் துயரைத் துடைக்க முன்வந்தமைக்காக எமதுமுழு ஆதரவையும் வழங்க முன்வருகின்றோம் என மன்னாரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் ஆரம்பக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய வண பிதா சேவியர் குரூஸ் குறிப்பிட்டார்.

மன்னார் நகர மண்டபத்தில் திரு. ஏ. பி பிகிருடோ தலைமையில் நடந்த இக்கூட்டத்தை பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட அரச அதிபர் ஜனப்

(7-ம் பக்கம் பார்க்க)

கல்குடா ஹோட்டலில்—

## கொள்ளை, 2 பெண்கள் மீது பலாத்காரம்

(ஏ. வி. மாணிக்கம்)

கல்குடாவிலுள்ள உல்லாசப் பிரயாணிகள் ஹோட்டல் ஒன்றில் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும், ரொக்கப்பணமும் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதுடன் அங்கு தங்கியிருந்த உல்லாசப்பயணிகளான

(8ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

104/1, அத்தியடிப் பிள்ளையார் குறுக்கு வீதியில் 2½ பரப்புக் காணியில் 5 அறைகள் பாத்றூம், கிணறு மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு மேற்குறிப்பிட்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். இ. பூலோகசிங்கம். 4610

½'', ¾'' கற்களும், நிராந்தி பலகை வகைகளும் சகாய விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்' தொடர்பு: மல்ரி சேவிசஸ், 37[351], மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல; 22762. சகுந்தலா மெற்றல் வேக்ஸ், குரும்பசிட்டி, தெல்லிப்பழை. 4653

## தவறிவிட்டது

எனது ரவலிங் பாக் ஒன்று யாழ். நகரிலிருந்து கோப்பாய் ஊடாக அச்சுவேலி செல்லும் வழியில் மினிபஸ்ஸில் தவறிவிட்டது. இப் பாக்கினுள் அடையாள அட்டை உட்பட உடுப்புக்களும் உள்ளன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. மனோகரன், லக்ஷ்மி கபே, வாடியடி, பூநகரி. 4655

## தேவை

15 வயது மாணவன் ஒருவருக்கு ஆங்கிலம், பொது அறிவு, கணக்குப் பாடங்கள் கற்றுக்கொடுக்க ஆசிரியர் ஒருவர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். விளம்பரதாரர், 67, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். அல்லது நேரில் வரவும். 4658

அனுபவமுள்ள D. A. M. அல்லது D A M. S. மருத்துவர்கள் டிஸ்பென்சறிக்கு தேவை. உடன் தொடர்பு கொள்ளவும் Dr. K. பாலேந்திரன், இந்திர பவனம், கரணவாய் தெற்கு, கரவெட்டி. 4646

## தவறிவிட்டது

23-7-85 நண்பகலளவில் யாழ். மின்சார நிலைய வீதியில் அம்பிகாபதி கடைக்குச் சமீபமாக கறுப்புநிற Purse தேசிய அடையாள அட்டையும் (இல: 646871123V) பல்கலைக் கழக அடையாள அட்டையும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுகூர்ந்து 22/2 ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 4651

# வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், இத்தாலி செல்லவிருக்கும் பிரயாணிகள் என்னுடன் தொடர்புகொள்ளவும்.

வெள்ளி, சனி, ஞாயிறு வரை

**வ. நல்லையா,**


அளவெட்டி வடக்கு - அளவெட்டி.

(4661)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

**திரு. மாரிமுத்து சிவராசா**

(Store Keeper, Dockyard, Colombo)



மலர்வு:
28-11-1948

உதிர்வு:
25-07-1983

கொடியவரின் இனவெறிக்கு
கொதித்திட்ட 83இல்
மடித்திட்டாய் புவிதனிலே
மறந்திடோம் நின் நினைவு.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நின் பிரிவால் துயருறும்:
தாய், மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகள்,
மருமக்கள், உறவினர், நண்பர்கள்.

நாவலர் பாடசாலையடி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (4665)

## முற்றிலாக் கட்டளையின் விளம்பரம்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற வனிதா ரவீந்திரனின் மரணசாதனமற்ற மரணச்சொத்து சம்பந்தப்பட்ட விடயம்.

காலஞ்சென்றவர்

இல. 227/T

அத்துடன்

சிவில் நடைமுறைக் கோவை (அதி.101) இன் 530ஆவது இலக்கப்பிரிவின் கீழ் செய்யப்படும் விண்ணப்பம்சம்பந்தமான விடயம்.

சாவகச்சேரி, கச்சாய் வீதியைச்சேர்ந்த லலிதா பாலகிருஷ்ணன்.

மனுதாரி.

எதிர்.

பராயமடையாதவர்

1. சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த ரவீந்திரன் கபிலன். இவர் பராயமடையாதவராகையால் அவரின் வழக்குப் பாதுகாவலராகிய 2ம் எதிர்வாதி மூலம் தோற்றுகிறார்.
2. சாவகச்சேரி கச்சாய்வீதியைச் சேர்ந்த க. இ. ஜெயக்குமார்.

எதிர்வாதிகள்.

இத்தால் விளம்பரப்படுத்துவது என்னவெனில் மேற்பெயரிட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்குறிப்பிட்ட நீதிமன்றத்தில் மேற்குறிப்பிட்ட இலக்கமிடப்பட்ட மரணசாதன வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அவ்வழக்கில் முற்றிலாக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் கட்டளையிடப்படுவது என்னவெனில் மரணச் சொத்துவரி செலுத்தப்பட்டு உத்தியோகச் சத்தியம் எடுக்கப்பட்டதும் மேற்பெயரிட்ட மனுதாரி அவரின் பெயருக்கு மரணச்சொத்து நிருவாகப்பத்திரம் வழங்கப்படுவதற்கு உரிமையுடையவர் என்று இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.

பராயமடையாதவராகிய மேற் பெயரிட்ட 1ம் எதிர்வாதியின் வழக்குப்பாதுகாவலராக மேற்பெயரிட்ட 2ம் எதிர்வாதி நியமிக்கப்படுகிறார் என்றும் குறிப்பிட்ட பராயமடையாத 1ம் எதிர்வாதியும் அவரின் வழக்குப் பாதுகாவலராகிய 2ம் எதிர் வாதியும் இம்மன்றின் முன் 1984 ஐப்பசி 24ம் திகதி அல்லது இம்மன்றினால் பின்போடப்படும் தேதி முற்பகல் 9-00மணிக்கு இம்மன்றின் முன் தோன்றவேண்டும் என்றும் இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1984 ஐப்பசி 24ம் தேதி அல்லது இம்மன்றினால் பின்போடப்படும் தேதி முற்பகல் 9-00 மணிக்கு இம்மன்றின் முன் தோன்றி இம்முற்றிலாக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படக் கூடாது என்பதற்கு காரணம் காட்டவேண்டும் என்றும் இத்தால் கட்டளையிடப்படுகிறது.

நீதிமன்றத்தின் கட்டளைப்படி 1984 மார்கழி 18ம் தேதியாகிய இன்று.

பதிவாளர்.

தவணை 9-8-85க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஆ. குணநாயகம்
பதிவாளர்.

19-7-85.
மனுதாரின் சட்டத்தரணி:
கா. பாக்கியலிங்கம்

4644

## ஈ.பி.ஆர். எல். எவ். அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச்சிறையில் 1983-ம் ஆண்டு கொலையுண்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தி ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி(ஈ.பி.ஆர்.எல் எவ்) யாழ் நகரில் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

''வெலிக்கடையில் மரணித்துப்போன தோழர்களே மறுபடியும், மறுபடியும் எழுந்து வருகின்ற உங்களுக்கு கால்களை ஊன்றி விழிகளை நிமிர்த்தி நாங்கள் காத்திருக்கிறோம்'' என கவிதை நடையில் எழுதப்பட்டுள்ள அவ்வஞ்சலியில் வெலிக்கடையில் கோரக் கொலைக்குள்ளான தோழர்களே, நண்பர்களே உங்கள் குருதியின் மேல் நின்று இந்த நிலத்தில் உங்கள் நினைவு காசனத்தை பொறிப்போம்' என சூள் உறைக்கப்பட்டுள்ளது.

## பாரதி ச. ச. நிலையம்

[யாழ்ப்பாணம்]

யாழ். வில்லூன்றிச் சோலை புரத்தில் புதிதாகத் திறக்கப்பட்ட சனசமூக நிலயத்திற்குப் பாரதி சனசமூக நிலையமென்று பெயரிடப்பட்டுள்ளது. இச்சனசமூக நிலையத்தின் தலைவராகத் திரு. பொன் பழனிச்சாமி (இராசா) யும், செயலாளராக திரு. மு இரத்தினலிங்கமும், பொருளாளராகத் திரு. க. பாலசுப்பிரமணியமும் தெரிவாகியுள்ளனர்.

## விற்பனைக்கு

றேடியோ, தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ, டெக் இவற்றின் உதிரிப்பாகங்கள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

# சித்ரா ரெக்ரைல்ஸ்

(ரெலிகோணர் கிளை)

159, மின்சாரநிலைய வீதி. நவீனசந்தை, யாழ்ப்பாணம். 4633

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

சிவசுப்பிரமணியம்
சிவநாதன்



மலர்வு:
20-5-1954

உதிர்வு:
25-7-1983

கற்பகப் பூப்போல் கமழுகின்ற அன்புருவே
பொற்புடைய நின் வடிவம் புன்னகைக்கும்
நின்வதனம்
அற்புதத்தை எல்லாம் அகழ்ந்தெடுத்த நின்பொலிவு
மற்புங்கள் நின்றன, வளமார்ந்த சொல்லழகு
ஆண்டிரண்டு போனபின்பும் அகன்றிடுமோ
எம்மைவிட்டு
மாண்ட புகழ் பெற்று, வானுலகில் நின்னுன்மா
நீண்ட முழுச்சாந்திபெற்று நீடிருக்கவேண்டுகின்றோம்
ஈண்டு நினையே எண்ணித் தவமிருக்கும்

தாய், சகோதரர்கள், மைத்துனர், உறவினர்கள்
வேலணை மேற்கு, வேலணை. (4609)

## ஈராண்டு நினைவஞ்சலி

செல்வன்
காசிப்பிள்ளை
சுரேஸ்குமார்



மலர்வு:
03-10-59

உதிர்வு:
25-07-83

ஈராண்டு மறைந்தது எங்கள் கண் மணியே-உந்தன்
மதிமுகத்தைக்காணாது நெகிழுதே எம்நெஞ்சம்-அந்தோ
எச்சமர்க்கும் வித்தகனாய் வாழ்ந்த நீ.
வஞ்சகரால் வாழ்விழந்த மர்மம் யாதோ?
தாயின் அரவணைப்பில் அண்ணன் அக்கா பாசப்
பிணைப்பில்
துள்ளிக் குதித்த புள்ளிமானே - இன்று
ஈழத்தாய் மடியில் மீளாத் துயில் கொண்டனையே:

உனது ஆத்மா சாந்தி அடையட்டும்:
உனது பிரிவால் வாடும்

அன்பு அம்மா, அண்ணா, அக்கா,மைத்துனர்.
வேலணை மேற்கு, வேலணை-6: [4666]

# இந்தியா அமெரிக்காவிடமிருந்து எதிர்காலத்திலும் ஆயுதங்களை பெருது

## - இந்திய பிரதமர் அறிவிப்பு -

புதுடில்லி, ஜூலை—24

இந்தியா எதிர்காலத்திலும் அமெரிக்காவிடமிருந்து யுத்த ஆயுதங்களைக் கொள்முதல்செய்வதற்கில்லை என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களை அமெரிக்காவிடமிருந்து கொள்முதல் செய்யாமலேயே இந்தியா தன்னைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய வல்லமையைக் கொண்டுள்ளது என்றும் பிரதம மந்திரி ராஜீவ் கூறினார்.

கடந்த மாத வெளிநாட்டுச் சுற்றுப் பயணம்பற்றி இந்திய ராஜ்சபாவில் அவர் விளக்கிக் கூறுகையில், அமெரிக்காவுக்குத் தான் அண்மையில் பயணம் மேற்கொண்டபோது இந்தியாவுக்கு அமெரிக்கா ஆயுதங்களை விற்பனைசெய்ய முன்வந்ததாகவும் தெரிவித்த அவர், இதுபற்றிய மேலதிக விபரங்களைக் குறிப்பிடவிரும்பவில்லை. பாகிஸ்தானுக்கு அதன்தேவைகளுக்கு மேலாக அமெரிக்கா ஆயுதங்களை வழங்கிவருவது குறித்து இந்தியா பெரும் அதிருப்தி கொண்டிருப்பதுடன், இதுபற்றிப் பல தடவைகள் அமெரிக்காவிடம் முறையிட்டும் வந்துள்ளது.

இதேவேளை இந்தியா தனக்குத் தேவையான நவீன ஆயுதங்களையும் சோவியத் யூனியனிடமிருந்தே பெற்றுவருகின்றது.

## பஞ்சாப்பில் வெள்ளம் 70 பேர் பலி!

புதுடில்லி ஜூலை. 24

பஞ்சாப்பில் மிக மோசமான வெள்ளம்பெருக்கு ஏற்பட்டுள்ளது, இந்த வெள்ளப் பெருக்கில் 70 பேர் பலியானார்கள். ஆயிரக்கணக்கானோர் வீடிழந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளிப்பதில், அரசின் வெள்ள உதவி அமைப்புக்கள் இரவு பகலாகச் செயல்பட்டு வருகின்றன.

வெள்ளத்தின் சீற்றம் சற்று தணிவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாகக் கடைசியாகக் கிடைத்த செய்தியொன்று கூறுகிறது. [க]

## இஸ்ரேல் 100 ஷியா கைதிகளை விடுதலை செய்ய முடிவு

றெல்அவிவ், ஜூலை-24

இஸ்ரேல் 100 ஷியா முஸ்லிம் கைதிகளைவிடுதலை செய்யமுடிவு செய்துள்ளது. இவ்வருடம் தெற்கு லெபனானில் கைது செய்யப்பட்டு இஸ்ரேல் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்ட கைதிகளில் இவர்களும் அடங்குவர்.

இன்னமும் 335 ஷியா கைதிகள் இஸ்ரேலில் இருக்கிறார்கள் இவர்கள் அனைவரையும் விடுதலைசெய்யுமாறு கடந்த மாதம் விமானத்தைக் கடத்தியவர்கள் கோரியிருந்ததும் தெரிந்ததே.

## பதவி மோகம் கொண்டோர் அடுத்த தேர்தலில் இல்லை

### ஜனாதிபதி பேச்சு

(கொழும்பு)

பதவி மோகதினால் தங்களையே மறந்து செயல்படும் அமைச்சர்கள் மற்றும் எம். பி. மார்களுக்கு அடுத்த பொதுத் தேர்தலில் இடம் கிடையாது என்று ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசிய கட்சியின் இளைஞர் அமைப்பின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்

திருநெல்வேலியில்

## தமிழ்நாடு கண்காட்சி தீக்கிரையானது!

[சென்னை]

திருநெல்வேலியில் நடந்த தமிழ்நாடு கண்காட்சி முற்றாக எரிந்து சாம்பலானது.

ஒரு கடையில் ஏற்பட்ட தீ பலத்த காற்றின் காரணமாக தமிழ்நாடு அரசின் 24 அரங்குகள் உட்பட அனைத்துக் கடைகளுக்கும் தீ விரைவாகப் பரவியதாகக் கூறப்படுகிறது.

தீவிபத்தில் நால்வர் காயமடைந்தனர். பலத்த பொருட்சேதம் ஏற்பட்டது.

இந்த விபத்து மின்சாரக் கோளாறினால் ஏற்பட்டிருக்கக் கூடுமெனக் கூறப்படுகிறது. சுமார் 45லட்சம் ரூபா பொருட்சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (க)

## குரும்பசிட்டியில் இன்று

[யாழ்ப்பாணம்]

குரும்பசிட்டி சன்மார்க்க சபை இன்று வியாழக்கிழமை சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை விழாக் கொண்டாடுகிறது.

பிற்பகல் 4-30 மணிக்கு சபைத் தலைவர் கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி உரைநிகழ்த்துவார்.

## தோப்பூர், குச்சவெளி ஆஸ்பத்திரிகள் இயங்க முடியாத நிலை

(திருகோணமலை)

மூதூர்த்தொகுதியில் தோப்பூர், திருகோணமலைத் தொகுதியில் குச்சவெளி ஆகிய கிராமங்களில் உள்ள அரசினர் வைத்தியசாலைகள், அண்மையில் இடம் பெற்ற வன்செயல் காரணமாக இயங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளன.

இந்த ஆஸ்பத்திரிகளுக்குப் பதிலாகவேறு இடங்களில் அவற்றை இயங்க வைப்பது குறித்து சுகாதார அதிகாரிகள் ஆராய்கின்றனர்.

சேருவிலவில் ஆஸ்பத்திரி இருந்த கட்டடத்தில் பாதுகாப்புப் படையினர் முகாமிட்டுள்ளனர்.

வன்செயலின் பொழுது வேலைத்தளங்களை விட்டுச் சென்ற மருத்துவத்தாதிகளை மீண்டும் அந்தந்த இடங்களுக்கு கடமையாற்றத் தொடங்குமாறு சுகாதாரத் திணைக்களத்தினால் பணிக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்:

## குஜராத்தில் கடுமையாக அமுலாக்க முடிவு!

அகமதாபாத், ஜூலை-24

குஜராத் மாநிலத்தில் அதிகரித்துவரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கடுமையான முறையில் அமுல்செய்ய விருப்பதாக குஜராத் அரசாங்கம் அறிவித்துள்ளது.

குஜராத் மாநிலத்தில் மிகப் பெரியநகரமான அகமதாபாதில் நேற்றுக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார் எனவும், இன்னுமொருவர் கத்திக்குத்துச் சம்பவத்தில் பலியானார் என்றும் கூறப்படுகிறது.

கடந்த 6 நாட்களாக அகமதாபாத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 36 ஆக அதிகரித்துள்ளது தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை விதிக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அமுல் நடத்தப்போவதாகக் குஜராத் முதலமைச்சர் அமர்சிங் சௌத்திரி சட்டசபையில் தெரிவித்தார். (க)

## மனோ மாஸ்டருக்கு அஞ்சலி

[கரவெட்டி]

உடுப்பிட்டி - கம்பர்மலைப் பகுதியில் ஆண்கள் பெண்களைக் கொண்ட திடீர் ஊர்வலம் ஒன்று கடந்த செவ்வாய் அன்று நடைபெற்றது.

கம்பர்மலை வாசிகசாலையில் ஆரம்பமான இவ்வூர்வலம், கொம்மாந்தறைஊடாக உடுப்பிட்டி, தம்பசிட்டிவரை சென்றது. இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட மனோ மாஸ்டரின் முதலாவதாண்டு நினைவையொட்டி அஞ்சலி செலுத்துமுகமாக இவ்வூர்வலம் நடாத்தப்பட்டது

''யார் இந்த மனோமாஸ்டர்?'' என்ற தலைப்பிலான கவிதை நடையிலான பிரசுரம் ஒன்றை 'அவரது நண்பர்கள்' நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளனர். [யா]

## வவனியா அரச அதிகாரி வீட்டில் கொள்ளை

(வவனியா)

வவனியா சின்னப்புதுக்குளம் என்ற இடத்திலுள்ள அரச அதிகாரி ஒருவருடைய வீட்டில் சுமார் 4000 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன

கடந்த சனி இரவு இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. திருட்டு இடம் பெற்றபோது அந்த அதிகாரி உறக்கத்தில் இருந்தார். இத்திருட்டு தொடர்பாக வவனியா பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது

இதேவேளை வவனியா ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவர் வீட்டில் ஓடு பிரித்துத் திருட்டு இடம்பெற முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இது பலிக்கவில்லை

வவனியா - வெளிக்குளம் பாடசாலை அறையிலிருந்து சில பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

## தெற்கு லெபனானில் இஸ்ரேலிய பீரங்கி படகுகள் தாக்குதல்

பெய்ரூட் ஜூன். 24

தெற்கு லெபனானின் துறைமுகம் ஒன்றில் இஸ்ரேலியப் பீரங்கிப் படகுகள் குண்டுகளால் தாக்கின. இதனால் ஒரு சரக்குக் கப்பல் தீக்கிரையானது இங்குள்ள முஸ்லிம் மக்கள்படை நிலைகளும தாக்குதலுக்குள்ளாகின.

லெபனான் கரைக்கப்பால் சந்நேகத்திற்கிடமான நிலையில் சில கப்பல்கள் நடமாட்டத்தை இஸ்ரேல் பீரங்கிப் படகுகள் பார்த்தனவென்று இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் கூறினார் [க]

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்

இரணைதீவு அரசினர் மத்திய மருந்தகப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் பொ இராசரத்தினம் மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

பயிற்சியாளர்களுக்கு

## யந்திரம் அன்பளிப்பு

(மண்டைதீவு)

எழுவைதீவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பனம்பொருள் உற்பத்திப் பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெறும் யுவதிகளின் உற்பத்தி ஊக்குவிப்புக்கென ஐந்து ஓலை வாரும் யந்திரங்களை பனை அபிவிருத்திச் சபை அன்பளிப்பாகவழங்கியுள்ளது

கடந்த வாரம் எழுவைதீவு மரியன்னை மகளிர்மன்றபயிற்சி நிலயத்தில்இடம்பெற்ற இந்த அன்பளிப்பு வைபவத்தில் எழுவைதீவு இந்து மகளிர் மன்றம், மணிவாசகர் மகளிர் மன்றம், எழுவைதீவு தெற்கு, வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவை கலந்து கொண்டன. இந்த யந்திரங்களை பனைஅபிவிருத்திச் சபையின் இயக்குனர் திரு. எஸ். பாலசிங்கம் தீவுப்பகுதி வடக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு கே பாலசிங்கத்திடம் கையளித்தார்.

## பொதுக்கூட்டம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 28-ம் திகதி சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபைத் தலைவர் வைத்திய கலாநிதி பாக்கியநாதர் அந்தஞசிரியார் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

## யாருடையது

யாழ். பஜார் நாகமுத்து அன் சன்ஸ் ஸ்தாபனத்துக்கு முன்பாகச் சிறு தொகைப்பணம், பல்கலைக்கழக அடையாள அட்டைகள், தேசிய அடையாள அட்டை மற்றும் சிறுபொருட்கள் அடங்கிய ஒரு சிறு பேர்சினைக் கண்டெடுத்துச் சங்கானையைச் சேர்ந்த திருமதி தவமலர் விஜயரட்ணம் எமது அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## வட, தென் கொரியாக்கள் ஒன்றாக இணைவதற்கு முதல் முயற்சி!

[சியோல்]

வட கொரியாவும், தென் கொரியாவும் மீண்டும் ஒன்றாக இணைவதைப்பற்றி விவாதிக்க தங்களது பாராளுமன்றக் கூட்டத்தை நடத்துவதற்கு இணங்கியிருக்கின்றன. இருநாடுகளும் தங்களது பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்களை மாநாட்டிற்கு அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எல்லைக் கிராமமான பொன்மியோமில் கூடிய அந்நாட்டின் பிரதிநிதிகளால் இம்முடிவு செய்யப்பட்டது.

இரண்டாவது உலகப் போரின் முடிவில் கொரிய நாடு பிரிந்த பின்னர் இதுதான் முதல் தொடர்பாகும். (க)

## மணிவாக்கு

நடுவு நின்றார் சிலர் ஞானிகளாவர்
நடுவு நின்றார் சிலர் தேவருமாவர்
நடுவு நின்றார் சிலர் நம்பனுமாவர்
நடுவு நின்றாரொடு நானும் நின்றேனே.

— திருமந்திரம்

## நமது நோக்கு

# இனவாதத்தால் சீரழியும் தென் ஆபிரிக்கா

இன்றைய அரசியல் சுழியோட்டத்தில் தென் ஆபிரிக்கா நேட்டோ ராணுவத்திட்டத்துக்கு மிக முக்கியமான நாடு.

தென்அத்திலாந்திக் சமுத்திரத்துடன் இந்துசமுத்திரத்தை இணைக்கும் பல கடற்பாதைகளுக்கு கேந்திரஸ்தனமாக விளங்குவது தென் ஆபிரிக்கா.

இந்து சமுத்திரத்தையும் திருகோணமலை துறைமுகத்தையும் பற்றி அதிகம் பேசும்நாம் தென் ஆபிரிக்காவின் தனித்துவத்தை மதிப்பிடத் தவறுவது இயற்கை.

தென் ஆபிரிக்காவிலும் நமீபியாவிலும் ஏற்பட்டிருக்கும் வெள்ளையர் இனவெறி சற்றும் அடங்காதிருப்பதற்கு இதுவே மிக முக்கிய காரணம்.

சகல நாடுகளிலும் தென் ஆபிரிக்க அரசு பகிஷ்கரிக்கப்பட வேண்டிய அரசென்ற கொள்கை ஏற்கப்பட்டிருக்கிறது. ஆனால் மேனாட்டு அரசுகளும் குறிப்பாக அமெரிக்காவும் மறைமுகமாக பிறெற்றெறியா ஆட்சிக்கு ஆதரவளிக்கின்றன.

அவற்றின் குடுமி சும்மா ஆடாதென்பதற்கு இன்னுமொரு காரணம்; தென்னாபிரிக்காவின் கனிப்பொருள் செல்வம், குறிப்பாகத் தங்கம், கரி, யூரேனியம் மிக அதிகமானது. இவை மேனாட்டுத் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாதது.

இந்த அடிப்படையில் அமெரிக்கா எவ்வித வெளிவேடம் பூண்டு தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கலைக் கண்டித்தபோதும், ஜனாதிபதி றீகனின் கோபாக்கினி அந்த நாட்டை எரித்துவிடுவதுபோல இருந்தாலும், செயல்கள் யாவும் ஜெனரல் போதாவின் அதிகார வெறியை அடக்க உதவுவதில்லை.

எவ்வாறு செல்வம் எதுவுமில்லாது அமெரிக்க உதவியுடனும் ராணுவ அதிகாரத்துடனும் மத்திய கிழக்கைச் சின்ன இஸ்ரேல்ஆட்டிவைத்ததோ அவ்வாறு இன்று தென்னாபிரிக்கா அங்கு வாழும் கறுப்பர்களின் சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பதுடன் அதனை எதிர்க்கும் தேசிய வீரர்களை அழித்துவிடும் அட்டூழியத்தில் தொடர்கின்றது.

இன்று இவ்விரு நாடுகளும்-தென்னாபிரிக்காவும், இஸ்ரேலும் பொருளாதாரத்தில் குன்றிவருவதால் நாட்டு மக்கள், சுதந்திரமென்று கூச்சலிடும்போது, அந்தப் பண்பை அல்ல வயிற்றுப் பசியையே குறிப்பிடுகின்றனர்.

சுதந்திரம் என்ற பாசாங்கில் தென்னாபிரிக்காவில் மேனாட்டு ராட்சத நிறுவனங்கள் பல தொழில்களில் முதலீடு செய்து வருகின்றன.

யந்திர மயமாக்கப்பட்ட தொழில் முயற்சிகளில் பெரும்பான்மையான கறுப்பர்களுக்கு வேலை இல்லை.

மேனாட்டுப் பகிஷ்காரம் உண்மையில் தொழிற்படும் போதும் தென்னாபிரிக்காவில் தொழில் நுட்ப ஆற்றல் படைத்த வெள்ளையர்கள், அமெரிக்கர்களே வேலையை இழப்பார்கள். எப்படிப் பார்த்தாலும், வெள்ளையரின் இன ஒதுக்கல்கொண்ட ஆட்சி மீட்சி பெற இடமில்லை.

இந்தத் தர்ம சங்கடத்தில் சிக்குண்டு தத்தளிக்கும் ஜெனரல் போதாவுக்குக் கிடைக்கும் பலம் அமெரிக்காவிடம் இருந்து வருவதை அரசியல் அவதானிகள் நுணுக்கமாக ஆராய்கின்றனது.

அது அவ்வாறாக; அடிமைத்தனத்தை முற்றாக அகற்றிவிடவேண்டுமென்று திடசங்கற்பம் கொண்ட ஆபிரிக்க தேசிய சபை நமீபியாவின் சுதந்திரத்துக்கு தென் ஆபிரிக்கா நடத்திவரும் சதிக்கும் பொதுவாக தென் ஆபிரிக்க மக்களின் பூரண சுதந்திரத்துக்கும் உயிரைப் பணயம்வைத்து போராடுகின்றனது.

இலங்கையைப் போல, அங்கும் ஆட்சிக்கு ரகசிய ஆதரவளிக்கும் அதிகார வர்க்கத்தினர் நடுத்தர முதலாளி வர்க்கத்தினருடன் இன்றைய ஆபிரிக்க சுதந்திரப்படையினர் மோதுகின்றனர்.

இந்த மோதல்களில் அண்மையில் 500 பேர் உயிரிழந்தனர். இந்த உக்கிரமான போராட்டம், போலிச் சமாதானத்தால் சமாளிக்கமுடியாதநிலைக்குத் திரு. போதாவைக் கொண்டுவந்திருக்கிறது.

கடந்த 25 வருடங்களில் இன்றுதான் மிகத் தீவிரமான நடவடிக்கைகளில் ஜெனரல் போதா இறங்கி இருக்கிறார் என்றால் அது தேசிய தீவிரவாதிகளின் கை ஓங்கியிருப்பதைக் குறிக்கின்றது.

இதனை முறியடிக்க தூரத்திலிருந்து தொழிற்படும் நேட்டோ நாடுகளோ, உள்நாட்டில் உள்ள பிற்போக்குச் சக்திகளோ முடியாதென்பதை காலம் காட்டும்.

தானாகவே அதிகாரத்தைப் பகிர்ந்து, உண்மைச் சுயாட்சியை நாட்டு மக்களுக்கு- பெரும்பான்மை கறுப்பருக்கு வழங்கும் ஞானம் திரு. போதாவுக்கு உதயமாகுமென நம்ப இடமில்லை.

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கைலாசபதி கலை அரங்கில் நேற்றுநடைபெறவிருந்த 'உறவுகளின் இராகங்கள்' என்ற நூல் வெளியீட்டு விழா இம்மாதம் 28-ந் திகதி மாலை 3 மணிக்கு மறைக்கல்வி நடுநிலையத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

# ★ இன்று சுந்தரர் குருபூசை

# சுந்தரரை தடுத்தாண்ட சிவநீதி

திருமணப் பந்தலிலே தான் சுந்தரரைச் சிவபெருமான் தடுத்தாட்கொள்ள வேண்டுமா? சுந்தரருக்கும் சடங்கவி சிவாச்சாரியார் மகளுக்கும் திருமணம் பேசத் தொடங்கியதும், அல்லது திருமணப் பந்தலுக்கு மணமகனை சுந்தரர் செல்லமுன் சிவபெருமான் தடுத்தாட்கொண்டிருக்கலாமே? சிவபெருமான் செயல் பொருத்தமாக வில்லையே என்பன நியாயமான கேள்விகள் போலத் தோன்றும்.

கயிலையில் சுந்தரர் சிவபெருமானை வேண்டிக்கொண்டபோது எம்பெருமானே மண்ணின்மேல் மானுடமாய் மயங்கும் சந்தர்ப்பத்தில் என்னை மயக்காது தடுத்தாட்கொள்ள வேண்டும் என்றே கேட்டிருந்தார். இந்தவரத்தின் காரணமாகச் சுந்தரர் மானிட வாழ்க்கையில் மயங்கும் நிலை பணப்பந்தலில்தான் ஏற்பட்டது என்று விளங்கிக் கொள்வதில் ஒருதடையும் ஏற்படாது. எனவேதான் சுந்தரரைச் சிவபெருமான் தடுத்தாட்கொள்ள வேண்டிய இடம் மணப்பந்தலாக அமைய வேண்டியிருந்தது என்று கருதலாம்.

சேக்கிழார் திருஞானசம்பந்தர் புராணத்தைப் பாடும்போது திருஞானசம்பந்தர் தன் திருமணவேளையில் மனைவியின் கையைப் பிடித்தபோது சிவனடிசேர விரும்பியதையும் மணவாழ்விலோ பெண் தொடர்பிலோ ஒரு சிறிதும் சலனப்படாத தன்மையையும் அழகாகவும், குறிப்பாகவும், தெளிவாகவும் குறிப்பிடுவார். இதுமட்டுமன்றி சாதாரண ஆண்மகன் எவனும் மயங்கும், இறுமாக்கும் நிலை மணப்பந்தலிலே ஏற்படுவதையும் யுக்தி, விவேகங்களால் அறியும்போது சிவன் செயல் நியாயம் மிக்கதாய் இருப்பதினை உணரமுடியும்.

சடங்கவி சிவாச்சாரியார் மகளின் கல்யாணம் தடைப்பட்டதற்கும் காரணம் புரியாமல் பலர் குறைகூறுகின்றனர். சடங்கவி சிவாச்சாரியாரின் மகள் மட்டுமன்றி அக்குடும்பத்தில் உள்ள-அக்குடும்பத்தின் மூவேழ் சுற்றமும் செய்த நல்வினைப்பயன் தொடர்புமே காரணமாயிருந்ததால் தான் அப்பெண் சிவலோகம் பெறும்நிலை ஏற்படமுடியும், ஏற்பட்டது. இது மட்டுமன்றி இப்பெண் விடயத்தில் விளக்கவேண்டிய உண்மை ஒன்று உண்டு:

இப்பெண்ணின் திருமணக் குழப்பம் போலன்றி உலகில் நாம் காணும் அவலமுடிவான திருமணவாழ்வுகள் எல்லாமே திருவருட் சம்மதத்தால் அவரவர் வினைக்கேற்ப சிவசாட்சியாகவே நடைபெறுகின்றன. இவற்றின் காரணகாரியங்களை நாம் அறியமுடியாமலிருப்பதால் நாம் பாதிக்கப்படுகிறோம் என்பதேயன்றி இறைவன் கருணையிலும் நீதியிலும் தவறுவதில்லை.

இறைவன் கருணை நீதிக்கு விரோதமற்றது என்பதையும் ஆன்மாக்களை உய்யக்கொள்ளும் பண்பில் மிக்கது என்பதனையும்உணர்வதற்கே பெரிய புராணம் போன்ற நூல்களில் காணப்படும்நிகழ்ச்சிகள் விளங்குகின்றன.

இப்படியான உண்மைகளை உணர சிவபக்தி, குருபக்தி, சாஸ்திரப் பயிற்சி, தவம் என்பன அவசியம். இவற்றால் இறையருளை உணரஉணர சிவபக்தியும் சிவனருளும் நீதியும் நன்கு புரியும்.

-தி. பொன்னம்பலவாணர்

# 'திம்பு' பேச்சுக்களை அரசு சாதகமாக பயன்படுத்துகிறது

## உமா மகேஸ்வரன் அறிக்கை

(சென்னை)

ஏற்கனவே நடைபெற்ற 'திம்பு' பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இலங்கையின் இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என்ற தவறான அபிப்பிராயத்தைப் பரப்பி குறுகிய லாபம் சம்பாதிக்க அரசு முயல்கிறது. இது தவறானது என கருதுகிறோம்.

இவ்வாறு தமிழ்ஈழ மக்கள் விடுதலைக் கழகம் சென்னையில் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

மேற்படி கழகத்தின் செயலாளர் நாயகம் திரு. உமா மகேஸ்வரன் சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது!

திம்பு பேச்சுவார்த்தைகளில் தமிழ் மக்களை பிரதிநிதிப்படுத்தும் ஆறு அமைப்புக்களும் இனப்பிரச்னை தீர்வுக்கான அரசு முன் வைத்த யோசனைகளை முற்றாக நிராகரித்துள்ளன என்பதே உண்மையான நிலையாகும். அத்துடன் அடுத்த மாதம் 12-ம் திகதி நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைகளில் இலங்கை தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய யோசனைகளை முன் வைக்கப்படும் என்பதும் எம்மைப் பொறுத்தவரை நிச்சயமற்றதாகவே இருக்கிறது.

திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்துஇலங்கையில் பதட்டநிலைமை மாறிவிட்டதென்றும், இனப்பிரச்சனையில் முன்னேற்றம் காணப்படுகிறதென்றும், இனப்பிரச்னைக்கு தீர்வு ஏற்படும் நிலை தோன்றியுள்ளதென்றும் ஜெனீவா மாநாட்டில் இலங்கைவெளிநாட்டுஅலுவல்கள் அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ் ஹமீத் பேசியிருந்தார்.

இந்த நோக்கம் இலங்கைக்கு கூடுதலான வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதாகும்.

இலங்கைக்கு கூடுதலான வெளிநாட்டு உதவிகளைப்பெறுவதற்கு சாதகமாக பூட்டான் பேச்சுவார்த்தைகள் பயன்படுகின்றன என்றும் ஜனாப்ஹமீத் பேசியிருக்கிறார்.

## மக்கள் கருத்து

### சென்னை வானொலியில் தேவாரப்பயிற்சி

சில தினங்களுக்கு முன் தங்கள் பத்திரிகையில் சென்னை வானொலியில் அகில இலங்கை திருமுறை மன்றத்தின் வேண்டுகோளினால் தேவார பண்ணிசை பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதை வாசித்து சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு 8-00 மணிக்கு கேட்க முடிந்தது. இந் நிகழ்ச்சி சைவ மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். இதற்காக முயற்சி செய்த திருமுறை மன்றத்திற்கும், இதுபற்றி செய்தி வெளியிட்ட தங்கள் பத்திரிகைக்கும் நன்றி. ஈழத்தின் பிரபல தேவார இசைமணி திரு, பொன். சுந்தரலிங்கம் அவர்களின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட தேவாரப்பாடல்கள் கொண்ட கஸற் நாடா கிடைக்குமிடத்தை யாராகுதல் அறியத் தருவார்களா?

—பொ. நாகராசா
மாதகல்.

# "இலக்கிய வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்கு"

(யாழ்ப்பாணம்)

"இலக்கிய வளர்ச்சியில் ஆசிரிய உலகிற்குப் பெரும் பங்கு உண்டு. இலக்கியம் படைப்போரும் படைப்போரைப் பாராட்டுபவரும் ஆசிரிய உலகிற் பெரும்பான்மையினர். இந்தவகையில் இலக்கியச்செல்வர் இருவரை இன்று அறிமுகம் செய்கிறோம் ஒருவர் கவிதைத்துறைக்குப் பணிபுரிபவர் மற்றவர் சிறுகதைத்துறைக்குப் பணிபுரிபவர்."

இவ்வாறு பலாலி ஆசிரிய கலாசாலைத்தமிழ்மன்றத்தினர் எடுத்த இலக்கியச் செல்வர் அறிமுகவிழாவில் பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. ஆர். எஸ், நடராசா குறிப்பிட்டார்.

ஆசிரிய கலாசாலைக் கணித மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்குத் தமிழ் மன்ற உபதலைவர் செல்வி ஆனந்த ராணி தலைமைவகித்தார்.

விழாவில் புலவர் பார்வதிநாதசிவத்தை ஆசிரியர் திரு. க. உமாமகேஸ்வரன் கோகிலா மகேந்திரனை கலாசாலை விரிவுரையாளர் திரு. சோ. பத்மநாதனும் அறிமுகம் செய்து உரையாற்றினர்.

புலவர் பார்வதிநாதசிவம் ஒரு பரம்பரைக் கவிஞன் அவருக்குஇலக்கியம் ஒருமுதுசொம் ஏனெனில் அவர் தந்தையார் மகாலிங்கசிவம் ஒருசிறந்த இலக்கிய கர்த்தா புலவருடைய கவிதைத் தொகுப்புக்களான காதலும் கருணையும் இரண்டு வரம் வேண்டும். இருவேறு உலகம் காலத்தால் விஞ்சி நிற்கும் சுவையான கவிதைகளையுடையன என்று திரு க. உமாமகேஸ்வரன் கூறினார்.

சோ. பத்மநாதன் தமது உரையில் தமிழில் சிறுகதையின் தோற்றம், வளர்ச்சிபற்றி விளக்கியபின், திருமதி கோகிலா மகேந்திரன் எழுதிய முரண்பாடுகளின் அறுவடை அறிமுகவிழா என்னும் இரு தொகுதிகளையும் அறிமுகம் செய்துவைத்தார் சமுதாயத்தில் மக்களிடையே ஏற்படக்கூடிய உளநெகிழ்ச்சிகளையும் தனிமனித ஏக்கங்களையும் தனது சிறுகதைகளின் கருக்களாக வடித்தமைஅவை காலத்தின் போக்கு ஏற்புடையதாக இருக்கின்றன என்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து கலா

(5ம் பக்கம் பார்க்க)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தையா நடராசாவின் மரணசாதனமில்லாச் சொத்து விடயமாக:

— இறந்தவர்

நடராசா கைம்பெண் சிவபாக்கியம், மருதம், கரவெட்டி மத்தி, கரவெட்டி

— மனுதார்

மரணசாதன நியாயாதிக்க வழ. இல: 1221 T

எதிராக

1. நடராசா மகள் கிருத்திகா
2. நடராசா மகள் ஆதிரை (பராயமற்றவர்)
3. நடராசா கந்தவேள் (பராயமற்றவர்கள்)
4. நடராசா மகள் ஆயிலி, (பராயமற்றவர்) யாவரும் மருதம் கரவெட்டி மத்தி, கரவெட்டி
5. வல்லிபுரம் சிவசூரியகுமாரன், கரவெட்டி மத்தி, கரவெட்டி

— எதிர்மனுதார்கள்

மேலே பெயர் கொண்ட மரணச்சொத்து வழக்கில் மேலே குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985 - ம் ஆண்டு ஆவணி மாதம் 9 ஆம் திகதி காலை 9-30 மணிக்கு இம்மன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985-ம் ஆண்டு ஆனி மாதம் 18 - ம் திகதி

நீதிமன்றின் கட்டளைப்படி
பதிவாளர்.

வரைவு:
வ. மகாலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.

4652

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

மட்டக்களப்பு காலஞ்சென்ற செல்லத்துரை ஆறுமுகநாதன் என்பவரின் மரண சாதனமில்லாத மரணச்சொத்துக்களின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

மரணசாதன நியாயதிக்கம் } 126

(இறந்துவிட்டார்) காசிநாதர் செல்லத்துரை சிவசக்தி கோயிலடி அச்சுவேலி

— மனுதார்

செல்லத்துரை மகள் தவமகள் சிவசக்தி கோயிலடி அச்சுவேலி.

— மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கில் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி காசிநாதர் செல்லத்துரை மனுதாராக நியமிக்கப்பட்டு பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டு அவர் தற்பொழுது காலஞ்சென்று விட்டபடியாலும் மேற்படி மரணமெய்தியவரின் சொத்துக்களை நிருவகிப்பதற்கு மேற்படி மனுதார் மனுச் செய்து இருக்கின்ற படியாலுல் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இதனால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985 - ம் ஆண்டு ஆவணி மாதம் 7-ம் திகதி முற்பகல் 8 - 30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இதனால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1985-ம் ஆண்டு ஆடி மாதம் 22-ம் திகதி
நீதிமன்ற ஆணைப்படி

சி இரத்தினம்,
பதில் பதிவாளர்.

க. வ. பாலசிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.

4648

★ இன்று கன்னதிட்டி அருள்மிகு காளிகாதேவி 4 ம் திருவிழா

சொக்கனைச்சொக்கவைத்தசோதி!

உக்கிரரூபியாளே ஓங்காரரூபியாளே
வக்கிர தந்தங் கொண்டவாலேயே வாளையாளே
சொக்கனைச் சொக்க வைத்தசோதியே ஆதித்தாயே
தக்க நற்கன்னதிட்டி இலங்கிடும் காளித்தாயே!

தரமது தெரியாப்புல்வர் தண்ணளி இல்லாக்கல்லர்
சிரமது தாழாப்பொலா அகங்கார வஞ்சநெஞ்சர்
உரமது அழித்துமேவார் அகந்தையு மழியச் செய்வாய்
வரநிறை கன்னதிட்டி இலங்கிடும் காளித்தாயே!

உதயா ஜுவல்லர்ஸ்
(நகைகள் வைர வியாபாரிகள்)
188, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ இன்று கன்னதிட்டி அருள்மிகு காளிகாதேவி 4 ம் திருவிழா

கதிநீயே காளித்தாயே!

அழுவதற் கொருவரில்லை உற்றிடுதுயரைச் சொல்லி
தழுவியே அணைக்குந்தாய் நீ அல்லது இங்கேவேறே
வழுதியின் மகளாய் வந்த திரிமூலைத் தேவிராணி
விழுமிய கன்னதிட்டி இலங்கிடும் காளித்தாயே!

எந்தனின் கதியும் நீயேகதித் தெழு நிதியும் நீயே
வந்துறுவிதியும் நீயே விதியழி சூலி நீயே
சுந்தரிசுமங்கை சூரிமகிஷனைவதைத்த வீரி
வந்தரி கன்னதிட்டி இலங்கிடும் காளித்தாயே!

QUICK TRAVELS
(Obtaining Passports Visas and Ticket Bookings)
136, Kasthuriar Road, Jafna.

## பரந்தன் வட்டார விளையாட்டுப்போட்டி

[கிளிநொச்சி]

பரந்தன் வட்டார இல்ல விளையாட்டுப்போட்டி பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. நா. தணிகாசலம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது பிரதம விருந்தினராக கிளிநொச்சி கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் கலந்து கொண்டார்.

வட்டார விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தை பளை மகாவித்தியாலயமும், இரண்டாம் இடத்தைப் பரந்தன் இந்து மகா வித்தியாலயமும், மூன்றும் இடத்தை பூநகரி மகாவித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

திரு. நா. தணிகாசலம்பிள்ளை அங்கு பேசுகையில் ''பரந்தன் வட்டாரத்தைப் பொறுத்தமட்டில் ஆரம்பக் கல்வி பயிற்றுவிக்க போதிய ஆரம்பக்கல்விப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் எமது வட்டாரத்தில் இல்லாதது பெரும் குறையாக உள்ளது என்று கவலை தெரிவித்துள்ளார்.

''சுமார் இருநூறு ஆசிரியர்கள் உடனடியாக இக்கல்வி வட்டாரத்தின் தேவையை பூர்த்தி செய்யவேண்டியுள்ளனர்'' என்றும் அவர் சொன்னார்.

இவ்வில்ல விளையாட்டுப் போட்டியை ஒழுங்காக அமைத்துக்கொண்ட தர்மபுர வித்தியாலய ஆசிரியர் திரு குருகுலராசாவுக்கும் பரந்தன் இந்து மகாவித்தியாலய அதிபர் திரு பத்மநாதனுக்கும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

விளையாட்டுக்குழு செயலாளர் திரு. குருகுலராசா நன்றி உரை நிகழ்த்தினார்.

விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்களை கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் வழங்கினார்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்.

பத்தமேனி அச்சுவேலி காலஞ்சென்ற சரவணமுத்து சிவகுரு என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்து விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன) இல:
நியாயாதிக்கம்) T/244

சரவணமுத்து சிவகுரு கைம்பெண் சின்னத்தங்கம் பத்தைமேனி, அச்சுவேலி.

மனுதார்

எதிராக,

1. சரவணமுத்து சிவகுரு மகள் கலாநிதி.
2. சரவணமுத்து சிவகுரு மகள் தயாநிதி

எதிர்மனுதார்கள்.

மேற்படி வழக்கில் மேற்கூறப்பட்ட இறந்தவரின் மரணச் சொத்து நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 18ம் திகதி நாளன்று முற்பகல் 9-30மணிக்கு இந்நீதமன்றத்தின் முன்னிலையில் தோன்றி அப்பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாதுஎன்பதற்கு காரணம் இருப்பின் காட்டுமாறு வேண்டப்படுகின்றீர்.

1985 ஆண்டு ஆடி மாதம் 10 ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

தயாரித்தவர்.
சொ. தியாகேந்திரன்
விண்ணப்பகாரியின் சட்டத்தரணி.

4643

# நேற்று முதல் நடைபெறாத பரீட்சைகள் அடுத்த வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டமனாறு வெளிக்கள நிலையம் நடாத்திவரும் 7-ம், 11-ம் ஆண்டுகளுக்கான கணிதப் பரீட்சைக்கு நேற்று போதியளவு மாணவர்கள் வராத காரணத்தினால் இப்பரீட்சை இம்மாதம் 29-ம் திகதி திங்கட்கிழமை நடத்தப்படும் எனக் கூறப்படுகிறது.

இதேபோன்று இன்றும் நாளையும் பாடசாலைகளில் நடைபெறவுள்ள சகலபரீட்சைகளையும் இம்மாதம் 30-ம் திகதி முதல் அகஸ்ட் 1-ம் திகதி வரை நடத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

ஆண்டு 4 முதல் 6 வரையிலான பரீட்சைகள் இம்மாதம் 29-ம் நடைபெறும். கிளிநொச்சி. முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளின் 2-ம்திகதி தவணைப் பரீட்சைகள் இம்மாதம் 27-ம் திகதி ஆரம்பமாகும்.

## யாழ். மேல் நீதிமன்றத்தில்:
# தருமபுரம் கொலை வழக்கில் எதிரிகளுக்கு சொந்தப்பிணை!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி தருமபுரம் கொலைவழக்கில் எதிரிகளில் மூவர் தலா5000 ரூபா சொந்தப் பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வழக்கு நேற்று முன்தினம் யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதவான் எஸ். ஆனந்த குமாரசுவாமி முன்னிலையில் எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் தருமபுரத்தில் 1979 ஜனவரி 19ம் திகதி சின்னத்தம்பி பொன்னையா, சின்னத்தம்பி மாரிமுத்து, பொன்னையா இராசு, முத்துராசா பரமசிவம், சின்னத்தம்பி தங்கவேலு ஆகியோர் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும், ஆண்டி செல்லத்துரை என்பவரைக் கொலை செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். பரராஜசிங்கம் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீஸ்கந்தராசா ஆஜரானார்.

நேற்று முன்தினம் 1ம் எதிரி சின்னத்தம்பி பொன்னையா, 2ம் எதிரி சின்னத்தம்பி மாரிமுத்து, 3ம் எதிரி சின்னத்தம்பி தங்கவேலு ஆகியோர் மட்டும் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர். மற்றைய இரு எதிரிகளும் வரவில்லை.

இவ்வழக்கில் எதிரிகள் தலா 5000 ரூபா பிணையில் செல்ல முன்னர் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

நேற்று நீதிமன்றம் வந்த 3 எதிரிகளுக்கும் பிணைநின்றவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி தாங்கள் பிணைநிற்கவில்லையென்றும், பிணைகளை ரத்துச் செய்யுமாறும் கோரினர்.

நீதிபதி மூவரின் பிணைகளையும் ரத்துச்செய்தார். புதிய பிணை செலுத்த ஆயத்தமா? எனக் கேட்டபோது எதிரிகள் மூவரும் ஆயத்தமில்லை எனத் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து நீதிபதி எதிரிகளை தலா 5000 ரூபா சொந்த பிணையில்செல்ல அனுமதித்து விசாரணையை அடுத்த மாதம் 21ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

யாழ்ப்பாணத்தில் சிறைச்சாலையில்லாத காரணத்தினால் நேற்று முன்தினம் உரும்பராய் சிறுவன் மரண விசாரணையில் சந்தேக நபர் சொந்தப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார் உருத்திரபுரம் கொலை வழக்கிலும் 3 எதிரிகள் சொந்தப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஈ)

## அந்த ஆண்டின் இதேநாள்!

அந்த ஆண்டு...
இதே மாதம்......
இதே நாள்.........
எம் நினைவை விட்டகலாத
சிவப்பு நாள்!
பச்சிளங் குழந்தை முதல்
பல்லில்லாக் கிழவன் வரை
பரிதவித்து உயிர்நீத்த நாள்
கரி நாள்!
எமது வாழ்க்கையிலே
எமது பரம்பரையிலே
என்றுமே மறக்க முடியாத
ஒரு இரத்த நாள்!
சிறைச்சாலையிலே
சிந்திய இரத்தங்கள்!
அது இம் மண்ணிற்குள்
என்றோ உறைந்துவிட்டது.
ஆனால் எமது நெஞ்சைவிட்டு
எமது மக்கள் இதயத்தை
-விட்டு
எதிர்காலச் சந்ததியின்
-மனதை விட்டு
அந்த (இ ரத்தங்கள்
-என்றுமே உறையாது!
அது அன்று முதல்
எப்பொழுதும் நெஞ்சை
-விட்டழியாது!
● குப்பிளானூர்
கே. எஸ். சுதாகர்

## இவர்களுக்கு சம்பளம் கிடைக்கவில்லை

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களுக்குக் கடந்த ஜூன் மாதச் சம்பளப் பணம் இதுவரை கிடைக்கவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் இவர்களது சம்பளப் பணத்தைக் காசோலைமூலம் அளவெட்டி ப. நோ. கூ. சங்கக் கிராமிய வங்கிக்கு உரிய காலத்தில் அனுப்பிவைத்திருந்ததாகவும், கிராமிய வங்கி காசோலையை வங்கியிச் பரிசீலனை செய்யவேண்டுமென்று கூறிச் சம்பளப் பணத்தை வழங்குவதில் தாமதம் காட்டிவருவதாகவும் இதுபற்றித் தெரிவிக்கப்படுகின்றது.

## இலக்கிய..

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

சாலை ஆசிரிய மாணவர்களான திரு. சி. எஸ் திலகரட்ணம் செல்வி செல்வமலர் சந்திரசேகரம் கலாசாலை அதிபர் திரு. பி. பரமேஸ்வரநாதன் ஆகியோரும் உரையாற்றினர்கள்.


புலவர் பார்வதிநாதசிவம் தமது உரையில் தமக்கு இந் நாள் ஒரு திருநாள் எனவும் இலக்கியத்துக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் இருக்கக் கூடிய மிகப்பெரிய தொடர்பு பிரிக்கமுடியாதவை எனவும் கூறினார் திருமதி கோகிலா மகேந்திரன் தமது உரையில் தாம் ஏதேஓர் ஆத்மதிருப்திக்காக எழுதுவதாகவும் அது வாழ்வின் ஒரு தூண்டற்பேறு தமது வளர்ச்சியில் கலாசாலையின் பங்கு மிக்வும் அளப்பரியது எனவும் கூறினார்; விழா செல்வி அருந்ததியின் நன்றியுரையுடன் நிறைவேறியது.

தொகுத்தவர்
—கே. ஸ்ரீகணேசன்

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கந்தையா சோமசுந்தரம்

(கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன் முகாமையாளர்)



படைப்பு:

03-06-1933

அழிப்பு:


25-07-1983

தலைவா!
உங்கள் நினைவால் வாடுகின்றோம்.
உங்கள் நினைவுடன் வாழுகின்றோம்.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், நண்பர்கள்.
94, குமரபுரம், பரந்தன். (4659)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

### கந்தசாமி பிரேம்திரகுமார்

(பொறியியலாளர்)



தோற்றம்:

11-11-1949

மறைவு:

25-07-1983

நீர் இறந்து ஆண்டு இரண்டாகினும் நின் நினைவு எம் நெஞ்சைவிட்டகலவில்லை. பாரி த்தில் எம் குறை தீர்ப்போர் யாருமில்லை. என் செய்வதென்றறியாது ஏங்கித் தவிக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்:
அன்புப் பெற்றோர், மனைவி, மழலைகள்: காந்தன், காந்தினி.
753, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (4605)

## இன்றைய பலன்

மாதம்- ஆடி
திகதி- 10 (1985-7-25)
நாள்- வியாழன்
திதி- அட்டமி பி. பி வரை
நட்சத்திரம்- சுவாதி பி. இ. வரை

மேடம்- எண்ணங்கள் ஆயிரம் சித்திரையிலே வந்து உந்தும் எடுத்த கருமத்தில் தடுமாற்றம் ஏற்படும். குடும்பத்திலும் கோணலுண்டு.

இடபம்- கொடுக்கல் வாங்கல்மூலம் பிணக்குகள் தோன்றும். சிலர் கடன்படவும் நேரிடும். இன்று சிரமங்களுக்கும் இடமுண்டு.

மிதுனம்- தெய்வத்தின் துணையுடன் தேடியது கிடைக்கும். பிதாவழிமூலம் வரவிற்கும் இடமுண்டு. ஸ்தல யாத்திரைக்கும் இடமுண்டு.

கடகம்- வணிகர்களாயின் இன்று அதிக முதலீடு செய்வதைத் தவிர்த்துக்கொள்ளவும். இயந்திரங்களுடன் பழகுபவர்கள் இன்று அவதானம் வேண்டும்.

சிங்கம்- நீண்ட நாள் கொடுக்கல் வாங்கல் இன்று நிவர்த்தியாகும். வெளியிடத்துச் செய்தியும் கிடைக்கும்.

கன்னி: எவ்விடயத்திலும் அமைதியைக் கடைப்பிடிப்பது நன்று. நீண்டநாள் பிணக்கில் இன்று நல்ல முடிவு தென்படும்.

துலாம்:- குடும்ப நலனுக்கு இடமுண்டு. வாய்வுக் கோளாறினால் பாதிக்கப்படலாம். உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும்.

விருச்சிகம்- வரவில் மந்த நிலையுடன் தாமதப் போக்கும் இடமுண்டு, இன்று அதிகப் பேச்சைத் தவிர்க்கவும்.

தனுசு- சகோதர வழியால் சஞ்சலப்பட நேரும். சரீர ஆரோக்கியம் குன்றும். வெளியிடத்துத் தொடர்புகள் பெருகும்.

மகரம்- அன்னை வழியால் அவஸ்தைப்பட நேரும். சிறு வருத்தம் வரினும் பெருமுறையில் கவனிக்கப்படல் நன்று.

(7-ம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

சுப்பையா

செல்லத்துரை



யாழ்ப்பாணம், 12/7, வைமன் வீதியைச் சேர்ந்த சுப்பையா செல்லத்துரை காலமானார். இவர் காலஞ்சென்ற திருமதி தங்கம்மா அவர்களின் கணவரும், திருமதி இரத்தினம் தங்கம்மா அவர்களின் அன்புச் சிறிய தந்தையும், திரு. இரத்தினம் சிவசுப்பிரமணியம், திருமதி கௌசலா சிவசுப்பிரமணியம் ஆகியோரது அன்புப் பேரனும் ஆவார். இறுதிக் கிரியைகள் நேற்று 24-7-85 புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கோம்பயன்மணல் மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெற்றன. உற்றார், உறவினர்கள், இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (4663)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

### விஸ்வலிங்கம் கந்தசாமி

(செல்வம் ஸ்ரோர்ஸ், களுத்துறை)



தோற்றம்:

25-3-1931

மறைவு:

25-7-1983

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வமே எம்மை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டு சென்றாலும் உம்மை நாம் ஒருகணமும் மறக்கவில்லை. தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.
வேலணை வடக்கு, வேலணை. (4623)


# றைபூனில் டபிள்யூ. பி. 70%

இது வெண்காயத்துடன் போட்டியிட்டு வளரும் சகல களைகளையும் முளைக்க முன்னரும், முளைத்த பின்னரும் சிறப்பாக கட்டுப்படுத்த ஹேகெம் ஸ்தாபனத்தாரினல் மீண்டும் சந்தைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இக்கலவை வெண்காயம் நட 2 நாட்களுக்கு முன்னர் தொடக்கம் முளைத்து 14 நாட்கள் வரை பயன்படுத்தலாம்.

விலை: 100 கி: 45/-

★ 100 கி — 500 கன்றுகளுக்கு போதுமானது.

BAYER

## ஹேகெம் லிமிட்டெட்

உங்கள் விநியோகஸ்தர்கள்:

யூனியன் ஏஜென்சிஸ் 50A பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
'பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ், அந்தோனிப்பிள்ளை கட்டடம், கிளிநொச்சி:
குளோப் ரேடர்ஸ், பசார் வீதி, வவுனியா.

பாயர் இரசாயனம் இலங்கையின் பெருவிளைச்சலின் உறுதுணை.

கஜேன்
மினி சினிமா
(சந்திரம் சந்தி அருகாமை)
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
5 OFFENS
WAR FILM
நாட்டின் விடுதலைக்காகப் போராடும் விடுதலை வீரர்களின் உணர்ச்சிக் காவியம்

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி அருகாமை
தினசரி 10-30, 12-30, 2-30, 4-45, 7-00
I spit on your Grave
(நீ பிணமானாலும் நான் வந்து பழிவாங்குவேன்)
4 கயவர்களால் ஓர் இளம் பெண் கொடூரமான முறையில் ஒருவர் பின் ஒருவராக கற்பழித்து சித்திர வதை செய்கிறார்கள். அப்பெண் தன்னை கற்பழித்த அந்த நால்வரையும் பழிவாங்கும் திரைச்சித்திரம். காணத் தவறாதீர்கள். சந்தர்ப்பம் மீண்டும் கிடையாது.
(இது கண்டிப்பாக வயது வந்தவர்கள் மட்டும்)

வெலிங்டன்
10-30, 2-15, 4-30, 6-45, 9-00.
Five Times All China Kung-Fu Champion
(1674-75-76-77-78-79)
Jet Lee in
Shaolin Temple
(Cinemascope—Color
(இதுவரை காணாத குங்பூ கராட்டி வீரசாகசங்கள் நிறைந்த சீன வீரர்களின் திகிலூட்டும்சம்பவங்களை நேரில் பார்ப்பதற்கு ஓர் சந்தர்ப்பம்)
கொழும்பு மாநகரில் 200 நாட்களுக்கு மேல் ஓடிய படம்.

லிடோ சினிமா
10-30, 2-15, 5-30
பாலு மகேந்திரனின்
நீங்கள் கேட்டவை
ஈஸ்ட்மன் கலர்
தியாகராஜன் (இருவேடம்) பூர்ணிமா, ஜெயராம், சில்க்சுமிதா, ஜெய்சங்கர்

ஸ்ரான்லி மினி
5'X5' திரையில்
10-30, 12-30, 2-30 4-30, 6-30
Escort Girls
வயது வந்தவர்களுக்கு மட்டும்

குமரன்
மினி சினிமா
10-30, 12-30, 2-30, 4-30
Charles Bronson
Ten to Midnight
(Adults Only)

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவில்/ வெலிங்டன் தியேட்டர் சந்திக்குமிடையில்)
10-30, 2-30, 4-30, 7-00 மணி
HELL CATS
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

## கப்பலில் வேலை செய்தவரைக் காணவில்லை

(கரவெட்டி)

வெளிநாட்டுக்குச் சொந்தமான கப்பலில் வேலை பார்க்கும் தமிழ் இளைஞர் ஒருவர் திடீரெனக் காணாமல் போய் விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஜெகதீசன் என்ற இளைஞரே காணாமல் போனவராவர்.

ஹொங்ஹொங்குக்கருகில் அக்கப்பல் சென்றுகொண்டிருந்தபோதே குறிப்பிட்ட இளைஞர் அக்கப்பலில் இல்லாதிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாம்.

அந்த இளைஞரின் பெற்றோர் இப்பொழுது கொழும்பிலுள்ள அக்கப்பல் ஏஜென்சியுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

[மா]

## பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 29-ம் 30-ம்திகதிகளில் நீர்வேலி அத்தியார் கல்லூரியில் நடைபெறவிருந்த கோப்பாய் கல்வி வட்டார மெய்வல்லுனர் போட்டிகள் பிற் போடப்பட்டுள்ளன.

## இன்றைய பலன்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

கும்பம்- பிள்ளையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம் கல்வியில் ஈடுபடுவோர் விடா முயற்சி நன்றி

மீனம்- வஞ்சகர் உறவால் சஞ்சலமடைய நேரும். சிலர் கூட இருந்தே குழி பறிப்பர். விழிப்புடனிருக்கவும்,

திருமலை
வே. ரவீந்திரன்

மேபெயர் மினி
(கன்னதிட்டி)
10-30, 2 30, 6-30
எம். ஜி. ஆர்.—லதா
நேற்று இன்று நாளை

தேவி மினி சினிமா
(வின்ஸர் அருகாமை)
10-30, 2-30, 6-30,
பிரேம் — அஞ்சலி
குரோதம்
(கலர்)
(புதிய வெளியீடு)

நியூ சாந்தி மினி
10-30, 2-30, 4-30, 6-30
Dragon Lee... John Lie
in
"KILL ALL KILL AGAIN'
— Full of Karatte —

இன்று முதல்
ஹரன் மினி
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
DIE EROBERER
ஐந்து இளஞ்சிங்கங்களின் பயங்கர கராட்டிச் சண்டைகள் நிறைந்த படம்.

மொடேர்ண்
மினி சினிமா
5 X 5 திரையில்
தினசரி 4 காட்சிகள்
NEW YORK NIGHTS
(வயது வந்தவர்கள் மட்டும்)

## நீர்ப்பாசன அலுவலகம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் அடிக்கடி அசம்பாவிதங்களுக்குள்ளானதால் வவனியா நகருக்கு மாற்றப்பட்டிருந்தது தெரிந்ததே

வெற்றுக்கட்டிடமாக இருந்த அவ்வலுவலகத்தில் ஆயுதப்படையினர் குடிபுகவிருந்ததாகக் கூறப்படுகிறது-

அலுவலகமும், களஞ்சிய அறையும் குண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்டதால் தரைமட்டமாகின. மற்றும் கராஜ், 3 விடுதிகள் ஆகியன தீவைத்து நாசமாக்கப்பட்டுள்ளன.

இக்கட்டிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'புல்டோசர்' இயந்திரமும் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

குண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்ட இவ்வலுவலகத்தை வவனியா மாவட்ட நீர்பாசனப் பிரதிப்பணிப்பாளர் திரு. துரைராஜரட்ணம் நேரில் சென்று பார்வையிட்டார். கட்டிடத்துக்கு ஏற்பட்டுள்ள சேதம் சுமார் 15 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இச்சுற்றுடலில் இருந்த சிங்களக் குடும்பங்கள் இந்த இடத்தைவிட்டு வெளியேறி விட்டதாகக் கூறப்படுகிறது.

(மா)

## மன்னார்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எம். எம். அப்துல்காதர், குருமார்களாகிய மௌலவி எம். இஸ்மாயில், பிரம்மஸ்ரீ ரி. மனோகரசர்மா. சிறீ தம்ம ஜோதி தேரோ, வண. பிதா பிலிப் ஆகியோரும் மங்கள விளக்கேற்றி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர். சகல மதக் குருமார்களும் இறைவணக்கம் செய்து ஆசியும் வழங்கினர்.

பின் பிரதம அதிதியும் சங்கத்தின் போஷகருமாகிய மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனாப் எம். எம். அப்துல் காதர் சிறப்புரை வழங்குகையில் எமது மாவட்டத்திற்கு இப்படியான ஒரு சங்கம் ஆரம்பித்து வைக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியதுடன் இச்சங்கத்தில் பொதுமக்களில் பலர் சேர்ந்து சேவையாற்ற வேண்டுமென்றும் தமது முழு ஆதரவையும் இச்சங்கத்தின் வளர்ச்சிக்காக அளிப்பதாகவும் உறுதி கூறினார்.

அமைப்பு விதிகளைச் சபையோருக்கு அறிமுகம்செய்து உதவி கமநல உத்தியோகஸ்தர் திரு. கெ. கணேஷ் உரையாற்றுகையில், கடந்த ஒன்றரை மாதங்களாக அமைப்பு விதிகளை சட்ட வல்லுனர்களைக்கொண்டும் பொதுமக்கள் பிரநிதிகளைக் கொண்டும் உருவாக்கியமைபற்றி எடுத்துக் கூறினார்.

கீழ்க்கண்டவர்கள் அலுவலர்களாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

தலைவர்: வண. பிதா. சேவியர் குரூஸ் (மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர்), உப தலைவர்: (முஸ்லிம் மக்கள் சார்பில்) ஜனாப் எஸ். எச். எம். ரசிற் ஜே. பி. (காரிய தரிசி மாவட்ட மந்திரி), உப தலைவர்: (சைவ மக்கள் சார்பில்) வி. கைலாசபிள்ளை இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர்), உப தலைவர்: (பௌத்த மதத்தின் சார்பில்) சிறீ தம்ம ஜோதி தேரோ (பிரதம குரு சுவர்ண பிம்பராமய விகாரை மன்னார்), உப தலை: (கிறிஸ்தவ மக்கள் சார்பில்) திரு. எ. பி. பிகிருடோ, செயலாளர்; திரு. சிங்கிலேயர் பீற்றர் (விவசாய போதனாசிரியர்), துணைச்செயலாளர்: திரு. பி. கெ செல்வராஜா (தொழில் அதிகாரி), துணைச் செயலாளர்: ஜனாப் ராவுத்தர் தாகீர் [சட்டத்தரணி], பொருளாளர்: ஜனாப் எம். எம். கனிபா [உதவி தபால் அதிகாரி மன்னார்), துணைப் பொருளாளர்: அருட்சகோதரி எம். விஜானி (அதிபர் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி.)

இத்துடன் நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுமிருந்து உறுப்பினர்கள் மாவட்ட தொடர்பு அதிகாரிகளாகவும் கிராம அடிப்படையில் ஐந்து உறுப்பினர்களும் பொதுச்சபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

இவ்வங்குரார்ப்பண வைபதித்திற்கு பொதுமக்களின் ஆதரவும் ராணுவ பொலிஸ் இணைப்பதிகாரிகளின் ஒத்துழைப்பும் கிடைத்தமையினால் நகர மண்டபம் பொதுமக்களால் நிரம்பியிருந்தது.

## பஞ்சாப்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை கைச்சாத்தான விடயத்தை பிரதமர் ராஜீவ்காந்தி நேற்றுலோக் சபாவில் வெளியிட்டார். அப்போது அங்கு பெரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்யப்பட்டது.

(து)

## திம்பு பேச்சில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''இலங்கை இனப் பிரச்னைக்குத் தீர்வுகாணும் நோக்குடன் திம்புவில் நடைபெற்ற பேச்சுக்கள் இழுபறி நிலையிலுள்ளன என்று கூறுவதற்கில்லை

அப்பேச்சுக்கள் தேக்கநிலை எதுவுமின்றி இடம்பெறுவதற்கு இந்தியா தன்னாலியன்ற அனைத்தையும் செய்வதற்குத் தயாராகவுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் 12ந்திகதி இடம்பெறவுள்ள பேச்சுக்கள் சுமுகமான சமரசத் தீர்வைக் காணும் வரை தொடர்ந்து இடம்பெறும். இதற்கான சூழ்நிலையையும். ஒத்துழைப்பையும் இந்தியா தாராளமாக வழங்கும்'' என்றார்.

## வடக்கில்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இவர் சென்னையிலிருந்து படகு மார்க்கமாக பருத்தித்துறை வந்திருந்தார். வட பகுதியில் தமது இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களையும் சந்தித்து அவர் உரையாடினார் கூடவே தமது இயக்கத்தவர் மீது பாதுகாப்புப் படைகள் தாக்குதல் எதனையும் நடத்தினால் அவற்றுக்கு எதிராகபதில் தாக்குதல் நடத்தும்படி அவர் உத்தரவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அனுதை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றுள்ளார். இவருக்கு வயது 28

கைதடி நவீல்ட் பாடசாலையில் இவர் ஆரம்பக் கல்வி பயின்றவர். சிறுவயது தொடக்கமே ஓவியம் வரைவில் திறமை பெற்றிருந்தார். இளமையில் தாய்-தந்தையரை இழந்த சந்திரதாஸ் பேசும் திறமை- செவிப்புலனற்றவர்.

1979 ல் கொழும்பில் கலாபவனில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில் இவர் வரைந்த சித்திரங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன,

யாழ். அரசாங்க அதிபராக கடமையாற்றிய திரு. லயனல் பெர்னண்டோ தலைமையிலான இக்கலாசாரக்குழு ஜனாதிபதிக்கு விடுத்த வேண்டுகோளுக்கமைய, இலங்கை-இந்திய கலாசார மாற்றுத் திட்டத்தின்கீழ் செல்வன் சந்திரதாஸுக்கு உயர்படிப்புக்கான வசதி செய்யப்பட்டுள்ளது.

(மா)

## யுத்தநிறுத்தம்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சிறிய குழுக்களின் பிரதான நோக்கமாகும் இதன் மூலம் குழப்பங்களைத் தூண்டிவிட்டு பூட்டான் சமரசப் பேச்சு முயற்சிகளைச் சிக்கலாக்குவதற்கு அவை முயற்சி செய்கின்றன. இத்தகைய குழப்பக்காரர்கள் இருசாராரிடையேயும் காணப்படுகிறார்கள்'' என்றார்.

இக்கட்டத்தில் குறுக்கிட்ட நிருபர் ஒருவர், ''பெரிய இயக்கங்கள் யுத்த நிறுத்தத்தை மீறவில்லையானால் கொழும்பில் குண்டு வைப்பு முயற்சியில் 'ஈரோஸ்' இயக்கம் ஈடுபட்டிருந்ததே? என்று கூறினார்.

அப்போது அமைச்சர், ''அம்முயற்சியில் ஈடுபட்டவர்களைக் கைது செய்தவர்களே 'ஈரோஸ்' என்று கூறுகிறார்கள். ஆனால் அது குறித்து எதனையும் தெளிவாகக் கூறமுடியாது'' என்றார்.

அமைச்சர் மேலும், ''இந்தியாவின் கைப்பொம்மையாக இலங்கை இருக்கின்றது என்ற கருத்து மக்களிடையே எழக்கூடாது என்ற காரணத்தினாலேயே இலங்கை இனப்பிரச்னை சமரசப் பேச்சுக்கள் பூட்டானில் நடத்தப்பட்டன'' என்றார்.

(கி)

2-வது ஆண்டு நினைவஞ்சலி
செல்வன் அ. சுதாகரன்



மலர்வு:
21-10-62

உதிர்வு:
25-7-83

எங்கள் அன்புத் தெய்வமே, ஆருயிர்ச் செல்வமே, தவப்புதல்வனே நீர் எங்கள் மத்தியில் இருந்து மறைந்து ஈராண்டுகள் சென்றுவிட்டபோதிலும் எங்களால் உமது பிரிவைத் தாங்க முடியவில்லை. ஆறாத் துயரில் ஆழ்ந்துகின்றோம். அகாலமாக இறைபதம் சேர்ந்துவிட்டீர். நீர் எங்களைவிட்டு எங்கும் செல்லவில்லை. எங்களிடமே ஒளிவடிவாய், வழிகாட்டியாய் நடமாடுகிறீர் என்ற அழியாத நம்பிக்கையுடன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

துயரில் துடிக்கும்:
அம்மா, அப்பா, தம்பியர், தங்கையர், மைத்துனர்.

(4671)

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

போக்குவரத்து விதிகளை மீறும்—

## மினி பஸ்களுக்கு ஸ்தல அபராதம்

# சட்டத்திலில்லாத நடைமுறை!

## அமைச்சரவைக் கூட்டத்தில் தகவல்!!

(கொழும்பு)

போக்குவரத்து விதிகளை மீறும் தனியார் மினி பஸ் வண்டிகளுக்கு ஸ்தல அபராதம் விதிப்பது, சட்டத்திலில்லாத ஒரு நடைமுறையாக இருந்துவந்துள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இது குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டது.

அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் இது குறித்து தெரிவித்ததாவது: கடந்த சில வருடங்களாக போக்குவரத்து விதிகளை மீறும் தனியார் மினி பஸ் வண்டிகளுக்கு ஸ்தல அபராதம் விதிக்கப்பட்டுவந்தது.

ஆனால் இந்த நடைமுறை சட்டத்தில் எழுத்திலில்லாத ஒரு அம்சமாக இதுவரை காலமும் இருந்து வந்துள்ளதை நேற்று அமைச்சரவைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப் பட்டது.

இதனையடுத்து புதியபோக்குவரத்துத் திருத்தச் சட்டம் ஒன்று கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டது அச்சட்டத்தில் இந்த ஸ்தல அபராத முறை ஒரு எழுத்திலுள்ள சட்டமாகடபடும் என்றார்.

அமைச்சரின் இந்தத் தகவலையடுத்து நிருபர் ஒருவர், ''ஸ்தல அபராதம் சட்டத்திலில்லாத நடைமுறையாக இருந்துள்ளதால் இதுவரை அபராதம் செலுத்தியோ அந்த நடைமுறைக்கெதிராக நடவடிக்கை எதனையும் எடுக்க முடியுமா?'' என வினவினர்.

இதற்கு அமைச்சரவர்கள் நீதிமன்றம் மூலமாக தமது நடவடிக்கைகளை இது குறித்து எடுக்கலாம் என்றார்.

இதேவேளை கூடுதல் பயணிகளை ஏற்றுவது வேகமாக மது போதையில் மினி பஸ் வண்டிகளைச் செலுத்துவது ஆகியனவற்றுக்கெதிராக புதிய போக்குவரத்துத் திருத்தச்சட்டத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை கந்தையா

நீர்வேலிவடக்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை கந்தையா காலமானார். அன்னார் காலஞ்சென்ற தண்டிகைப் பிள்ளையின் அன்புக் கணவரும், இராசையா (உள்நாட்டு இறைவரித் திணைக்களம்), முருகையா (முகாமையாளர் கிராமிய வங்கி, நீர்வேலி), சந்திரராசா, தவபதியம்மா, ஆகியோரின் அன்புத் தந்தையும் அருளானந்தம் (ஈழநாடு), சித்தா, இராசேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும், கவிதா, சுஜாதாவின் அன்புப் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் இன்று (25-07-85) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மக்கள், மருமக்கள்,
நீர்வேலி வடக்கு. 4673

## ஹர்த்தால் அமைதியாக ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

83 ஜூலைக்கலவரத்தின் போது தீவிரவாத தமிழ் இளைஞர்களும், தலைவர்களும் பொதுமக்களும் பெருமளவில் படுகொலை செய்யப்பட்டதை நினைவுகூரும் விதத்தில் நேற்று யாழ்ப்பாணத்தில் ஹர்த்தால் இன்றும் நாளையும் நடைபெறும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ். நகரில் சில பாடசாலைகளுக்கு மாணவர்கள் வழக்கத்திலும் பார்க்க குறைவாக வந்திருந்தனர். பரீட்சைகள் நடைபெறுது என அறிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து அவர்கள் திரும்பிச்சென்றனர். சில பாடசாலைகளுக்கு மிகக் குறைவாகவே மாணவர் வந்திருந்தனர்.

யாழ். நீதிமன்றங்களுக்கு நேற்று சட்டத்தரணிகளும், கட்சிக்காரர்களும் வராததினால் விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

யாழ். நகரில், காலையில் கடைகள் திறக்கப்பட்டிருந்த போதிலும், நண்பகலுக்கு பின்னர் வியாபாரம் நடைபெறவில்லை. கடைகள் மூடப் பட்டன. (க-மா)

## கல்குடா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இரு இளம் பிரெஞ்சுப் பெண்களும் பலாத்காரம் செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நேற்றுமுன்தினமிரவு இப் பயங்கரச் சம்பவம் இடம் பெற்றது.

ஆயுதம் தாங்கிய காடையர் கோஷ்டியொன்றே இச்செயலில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளதாம்.

பலாத்காரம் செய்யப்பட்ட இரு இளம் பெண்களும் மட்டக்களப்பு சட்டவைத்திய அதிகாரியால் பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் அச் சம்பவம் ஊர்ஜிதம் செய்யப் பட்டுள்ளதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இச்சம்பவம் தொடர்பாக உயர்மட்ட விசாரணை நடைபெற்றுவருகிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி

### சரஸ்வதிப்பிள்ளை அப்பாத்துரை

திருமதி சரஸ்வதிப்பிள்ளை அப்பாத்துரை காலமாகி விட்டார். இவர் திரு. T N. அப்பாத்துரை (ஓய்வு பெற்ற தபால் அதிபர் மலேசியா)யின் அன்பு மனைவியும், திருமதி சீதாதேவி வைத்திலிங்கம், மகேஸ்வரன் (இயக்குனர் பொதுச்சுற்றுடல் மலேசியா), சர்வானந்தன் (விரிவுரையாளர் நைஜீரியா) மகாதேவன் (கணக்காளர் சம்பியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நீதியரசர் வைத்திலிங்கம், சரோஜாதேவி ரேகினி, குணலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-7-85 இன்று சீதா இல்லம் மல்லாகத்தில் நடைபெற்று பிற்பகல் 2மணிக்கு தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
4682

## கடத்தல்

[யாழ்ப்பாணம்]

யாழ் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரின் மினிவான் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது

நல்லூரிலுள்ள பொலிஸ் சார்ஜன்ட் தேவசகாயம் என்பவரின் வீட்டிலிருந்தே அவ்வான் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (மா)

## மரண அறிவித்தல்

### சுவாமிஜி முத்துக்குமாரு மயில்வாகனம்

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆனந்தா ஆச்சிரமத்தின் நிர்வாகியான திரு. முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிஜி அவர்கள் 24-07-85ல் காலமானார் அன்னாரது தகனக்கிரியைகள் 25-07-85 வியாழக்கிழமை (இன்று) மாலை 4-00 மணிக்கு தொண்டமானாற்றில் நடைபெறும்.

4669 ஆச்சிரம அன்பர்கள்.

## ஆசிரியர்கள் ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரத்தில் கடந்த மே மாதம் 17ம் திகதி இடம் பெற்ற கலவரத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வந்துள்ள தமிழ் ஆசிரியர்களின் எதிர்கால நிலைமை குறித்து ஆராய்வதற்கான ஆலோசனைக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது

யாழ் ஜும்மா பள்ளிவாசல் வீதியிலுள்ள மலாயன் சங்கக் கட்டிடத்தில் நடைபெறவுள்ள இவ்வாலோசனைக் கூட்டத்துக்கான ஏற்பாடுகளை பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு மேற்கொண்டுள்ளது.

அனுராதபுரத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றிய 150க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் அங்கு நடைபெற்ற சம்பவங்களால் மீண்டும் அங்கு திரும்பமுடியாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. (மா)

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் இராசதுரை

நீர்வேலி வடக்கு திருமதி பாக்கியம் இராசதுரை காலமானார் அன்னார் காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும் பஞ்சாட்சரம் (உரிமையாளர், அருள்முருகன்யுவர்லஸ். யாழ்ப்பாணம் - புதுக்குடியிருப்பு), சடாட்சரம் (நியூ லக்கியுவர்லஸ்) விமலபூசனி, ஜீவகாருணியம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25-7-85 [இன்று] வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நீர்வேலி வடக்கில் நடைபெறும். உற்றார் உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

4672 தகவல்: இ. பஞ்சாட்சரம்.

## மரண அறிவித்தல்

### தம்பு சபாரட்ணம்

தம்பு சபாரட்ணம் திருநெல்வேலி (பிரபல சீமைக்குடிவகை வியாபாரி-பிரண்டி யாழ்ப்பாணம், வவனியா) அன்னார் 23-07-85-ல் சிவபதமடைந்துவிட்டார் இவர் மங்கையற்கரசியின் அன்புக்கணவரும், நித்தியானந்த கணேஷ்வரன், லக்ஷ்மணலால் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா), திருஞான செந்தில்லால் [உதவி அரசாங்க அதிபர் பணிமனை நல்லூர்], பாலச்சந்திரலால், சந்திரபோஸ் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா), சுந்தரலிங்கம் (U K), திருமதி ஜெயலக்ஷ்மி ஜெயப்பிரேமலோசன், குபேரலால் (மேற்கு ஜெர்மனி), ரவீந்திரலால், அம்பலவாணர், பங்கயற்செல்வி ஆகியோரின் அன்புத்தந்தையும், ஜெயப்பிரேமலோசன், நகுலேஸ்வரி இந்திராணி (அவுஸ்திரேலியா), யோகராணி, அன்னலக்ஷ்மி, சிறீரஞ்சனி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புமாமனும், செல்வரட்ணம் (கிராமசேவையாளர் கொக்குவில் மேற்கு) அவர்களின் தாய்மாமனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது குடும்ப மயானமான கொக்குவில் 'கணக்கர் மரத்தடி'யில் 25-07 85 இன்றுபிற்பகல் 1-00 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. செல்வரட்ணம்
4674

## தோழர்கள் எங்கே?

(யாழ்ப்பாணம்)

விடுதலை இயக்கம் ஒன்றினால் வாகனம ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்ட தமது இயக்கத் தோழர்கள் எங்கே என்று கேட்டு 'தமிழீழ விடுதலை இராணுவம்' (ரெலா) துண்டுப்பிரசுரம் ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலை இராணுவம் இயக்கத்தைச் சேர்ந்த யோகன், சலீம், பிரசாத் ஆகியோர் வவனியாவில்வைத்துக் கடத்திச் செல்லப்பட்டதாக அப்பிரசுரத்தில் குறிக்கப்பட்டுள்ளதுடன் அச்செயலுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## மரண அறிவித்தல்

### திருமதி

### ஞானசௌந்தரி தம்பித்துரை (இராசாத்தி)

திருமதி ஞானசௌந்தரி (இராசாத்தி) அவர்கள் மறுமை எய்தினார் அன்னார் தம்பித்துரையின் அன்பு மனைவியும், சரோஜினி, வஜயராஜ், லோகினி, ஞானசிலோஜினி, வசந்தினி, அற்புதராஜ், ஜீவராஜ் ஆகியோரின அன்புத் தாயாரும், சோமநாதன், சாந்தா, இரத்தினராஜா, வில்சன், ஜனேந்திரன், தேவராணி, ஜெயா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் பிரேதசம ஆராதனை அவரது இல்லத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
த. இரத்தினராஜா
புகையிரதநிலையவீதி,
சாவகச்சேரி. 4683

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P.Box 49, Telegram Eelanadu, Telephone, 22389 ,24126,